செ.வெ.எண்:16 /அக்டோபர்/2020 நாள்:06.10.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு, புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

-------------------

திருச்சிராப்பள்ளி மாவட்டம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு புள்ளம்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை பூர்த்தி செய்யும்/நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 06.10.2020 அன்று காலை 10 மணி முதல் 04.11.2020 அன்று பிற்பகல் 05.45 மணி வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| 1 | பதவியின் பெயர் | - | அலுவலக உதவியாளர் |
| 2 | பணியின் தன்மை | - | அலுவலகத்தில் பணிபுரியும் உயர் அலுவலர்களுக்கு அடிப்படை பணிகளை மேற்கொள்வதில் உதவி செய்தல் மற்றும் அலுவலக நடைமுறை பணிகளில் உதவிடுதல். |
| 3 | சம்பளம் | - | !ரூ.15700-50000 என்ற சம்பள ஏற்ற முறையில் அரசு நிர்ணயம் செய்யும் படிகளுடன் |
| 4 | வயது | - | 01.07.2020 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும். |
| 5 | வகுப்பு | - | அதிகபட்ச வயதுவரம்பு (01.07.2020 அன்று உள்ளவாறு) |
| | பிற்படுத்தப்பட்ட வகுப்பு (முஸ்லீம் தவிர), (BC( Other than Backward class Muslims) | - | 32 வயதிற்குள் |
| 6 | மொத்த பணியிடங்கள் | - | 1 |
| 7 | இட ஒதுக்கீடு விவரங்கள் | | |

| GT/OC | BC | BC(M) | MBC/DNC | SC | SC(A)W/DW | ST | Total |
|---|---|---|---|---|---|---|---|
| - | 1 | - | - | - | - | - | 1 |

உள் இடஒதுக்கீடு விவரங்கள் அறிவிக்கையில் குறிப்பிடப்பட வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 8 | கல்வித்தகுதி | - | 8-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் (விதி 5 (2) (a)) |
| 9 | விண்ணப்ப படிவம் | - | இப்பணியிடத்திற்கான விண்ணப்ப படிவத்தினை https://tiruchirappalli.nic.in என்ற இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். |
| 10 | விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசி நாள் | - | 04.11.2020 பிற்பகல் 5.45 வரை |

<u>நிபந்தனைகள்</u>:

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பத்தினை https://tiruchirappalli.nic.in என்ற இணையதளத்தில் உள்ள விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும். இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை **ஆணையர், ஊராட்சி ஒன்றியம், புள்ளம்பாடி, திருச்சிராப்பள்ளி** - என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பப்பட வேண்டும். இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் உள்ளவாறு விவரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்பட வேண்டும் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலிக்கப்படமாட்டாது எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் நிர்வாகத்திற்கு உண்டு. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும். இனசுழற்சி, வயது மற்றும் கல்வித் தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்கப்படும். அரசு விதிகளின்படி இனசுழற்சிமுறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ,ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு:**

**உதவி இயக்குநர்,**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**திருச்சிராப்பள்ளி.**